**பதவி ஸ்ரீபுர பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2019 மே 27, 2019 மே 31 ஆந் திகதிகளில் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதவி ஸ்ரீபுர பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவையாளர்களுக்கு சம்பளமாகச் செலுத்தப்பட்ட ரூபா 3,266,858 வான பணம் பெறப்பட வேண்டிய கணக்குகளிலிருந்து விடப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் சீர் செய்யப்பட வேண்டும். | 2018 ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் வரையான மந்திரிகளின் கொடுப்பனவு மீள் நிரப்பப் பெறுதல் மற்றும் 2018 நவம்பர் மற்றும் திசெம்பர் வரையான சேவையாளர்களின் சம்பளத்தை மீள் நிரப்பப் பெறுதல் 2019 ஆம் ஆண்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் இடம்பெற்றுள்ளதாகவும் 2018 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது கணக்குப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரிவில் காணப்படும் --- பதிவேடுகளை உபயோகப்படுத்திக் கொள்வதற்கு திருமதி ஏ.ஜீ.ஜீ அலுத்கம செயலாளரினால் கணக்குப் பிரிவிற்கு எழுத்து மூலமாக வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளுக்கு அமைவாக செயற்பட்டதனால் 2018 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டு வழங்கப்படாத எந்த வருமானமும் 2018 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிப்பதற்காக உபயோகப் படுத்தப்படவில்லை என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். அது 2019 ஆம் ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | உத்தியோகத்தர் ஒருவரினால் கந்தளாய் பிரதேச சபையினால் பெற்ற இடர் கடன் பணத்தை பதவி ஸ்ரீபுர பிரதேச சபையின் ஊழியர் கடன் கணக்கிற்குள் உள்ளடக்கப்படாததனால் அந்த கணக்கின் மீதி ரூபா 245,000 வில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் சீர் செய்யப்பட வேண்டும். | கணக்குகளை தயாரிக்கும் போது இடம்பெற்ற குறைப்பாட்டின் காரணமாக கந்தலை பிரதேச சபையினால் பெறப்பட்ட இடர்கடன் பணம் 2018 ஆம் ஆண்டிலே கணக்கிடப்பட்டிருந்தது. அதை 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்ழையுடன் அறியத் தருகின்றேன். |
| (இ) | மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் மீளாய்வாண்டிலே ஒப்பந்தத்திற்கு முனைந்து முடிக்கப்பட்டுள்ள இரண்டு தொழில் முயற்சிக்காக மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் பெறப்பட வேண்டிய ரூபா 1,982,058 பணம் பெறப்பட வேண்டிய கணக்குகளிலிருந்து பெறப்பட வேண்டிய கணக்குகளிலிருந்து | நிதிக் கூற்றுக்களில் சீர் செய்யப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிலே PSDG ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட தொழிலுக்காக 2019 ஆம் ஆண்டிலே மீள் நிரப்பல் பெறப்பட்டிருந்ததுடன், அந்தப் பணம் 2018 ஆம் ஆண்டின் கணக்கிற்காக உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. அது 2019 |

| | | | |
|---|---|---|---|
| | விடப்பட்டிருந்தது. | | ஆம் ஆண்டிலே கணக்குகளை தயார்படுத்தும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஈ) | நீர் வழங்கும் களஞ்சியத்தில் மீளாய்வாண்டிலே இறுதி தினத்தில் உள்ள ரூபா 346,304 இருப்பு மீதி இறுதி இருப்புக்களிலிருந்து விடப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் சீர் செய்யப்பட வேண்டும். | நீர் வழங்கும் களஞ்சியத்தில் இருப்பு மீதி இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது சமப்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதுடன் கணக்குகளின் இறுதி இருப்புக்களில் விடப்பட்டிருந்தது. அது இப்போது சமப்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு கணக்கு தயார்ப்படுத்தும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (உ) | பிரதேச சபையின் சுதந்திர ஆயுர்வேத மருந்தகத்தின் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள ரூபா 195,632 இருப்பு மீதி இறுதி இருப்புக்களிலிருந்து விடப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் சீர் செய்யப்பட வேண்டும். | சுதந்திர ஆயுர்வேத மருந்தகத்தின் இருப்பு மீதி இறுதிக் கணக்குகளை தயார்ப்படுத்தும் போது சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் கணக்குகளின் இறுதி இருப்புக்களிலிருந்து விடப்பட்டிருந்தது. அது 2019 ஆம் ஆண்டிலே கணக:கு தயார்ப்படுத்தும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஊ) | 06 சந்தர்ப்பங்களில் வெளி நிறுவனங்களில் பெறப்பட்ட சேவைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 146,504 பெறுமதிக்கு ஏற்பாடுகள் வேறாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் சீர் செய்யப்பட வேண்டும். | மறுமொழி வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் நீர் பிணை வைப்பு பணம் ரூபா 158,000 மற்றும் கடைகளின் பிணை | நிதிக் கூற்றுக்களில் சீர் செய்யப்பட வேண்டும். | பேரேட்டுக் கணக்குகளில் நீர் பிணை வைப்பு பணம் மற்றும் கடைகளின் பிணை வைப்பு மணம் குறிப்பிடப்படுதல் |

| | | |
|---|---|---|
| வைப்பு ரூபா 216,270 ஆக இருப்பினும் அந்தக் கணக்கின் வைப்பு மீதிகளில் விடப்பட்டிருந்தது. | | விடப்பட்டிருந்ததாக தாழ்மையுடன் அறியத்தருவதோடு அது 2019 ஆம் ஆண்டிலே கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 1.3.2 கணக்காய்விற்கான தேவையான எழுத்துமூலமான சான்றுகளின்மை

### (அ) தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிகக்ப்படாமையின் காரணமாக ரூபா 162,793,343 மொத்தம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 04 விடயங்களில் கணக்காய்வின் போது திருப்திகரமாக அவதானிப்பதற்கு முடியாது போனது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்குகளின் மீதியை உறுதி செய்யும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ரூபா 4,350,676.91 பெறுமதிக்கு உரிய நிலையான சொத்துக்கள் சம்பந்தமான தேவையான தகவல்கள் தற்போது தயாரிக்கப்பட்டு முடிவடைந்திருப்பதுடன், அண்மைக் காலங்களிலிருந்தே நிலையான சொத்துக்களின் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருவதன் காரணமாகவும் காணப்படுகின்ற சொத்துக்களின் தகவல்களை பழைய பதிவேடுகளை பரீட்சித்து அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள் | | | |
| i. 217 ஆவது விதி | அனைத்து காணிகள் மற்றும் கட்டிடம், வீதிகள், அடக்கஸ்தலங்கள், விளையாட்டு மைதானங்கள், பொதுக் கிணறுகள், குழாய் கிணறுகள், மற்றும் வாகனங்கள் சம்பந்தமாக ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து காணிகள் மற்றும் கட்டிடம், வீதிகள், அடக்கஸ்தலங்கள், பொது கிணறுகள், குழாய் கிணறுகள் மற்றும் வாகனங்கள் சம்பந்தமாக எதிர்காலத்தில் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| ii. 218 ஆவது விதி | காணி மற்றும் கட்டிடம் தொடர்பாக PS46 படிவம் பிரகாரம் பதிவு நாயதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | காணி மற்றும் கட்டிடம் தொடர்பான பதிவுகள் தற்போது நாளதுவரையாக்கப்பட்டு வருவதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் | பிணை வைக்கப்பட வேண்டிய 07 நபர்களினால் ஊழியர் பிணை வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் களுக்காக 2019 ஆம் ஆண்டில் பிணை வைப்பு பணம் இடம்பெறுவதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (இ) 2002 நவம்பர் 11 ஆந் திகதிய AI/2002/2 இலக்கமுடைய நிதி அமைச்சின் | கணனி தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | கணனி தொடர்பான நிலையான பதிவேடு நாளதுவரையாக | கணனி தொடர்பான நிலையான சொத்து பதிவேட்டிலே பழைய கணனி தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப் |

| | | | |
|---|---|---|---|
| அரச கணக்குகள் சுற்றுநிருபம் | பேணப்பட வேண்டும். | பட்டிருப்பதாகவும், புதிதாக கொள்வனவு செய்யப்படுகின்ற கணனிகளை உட்படுத்துவது விடப்பட்டிருப்பது இடம்பெற்றிருப்பதை தாழ்மையுடன் அறியத் தருவதுடன் அந்த பதிவுகளை சரிசெய்வற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,185,706 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 321,380 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,100 | 1,083 | 1,100 | 96 | 1,147 | 1,321 | 1,233 | 57 |
| வாடகை | - | - | - | - | 7,000 | 7,343 | 7,078 | 1,168 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 478 | 457 | 472 | - | 483 | 856 | 673 | 183 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையின் பிரதான வருமான மார்க்கமான நீர்ப்பட்டியல் வருமானமாக இருப்பினும் மீளாய்வாண்டிலே இறுதித் தினத்தில் ரூபா 1,168,000 நீர்ப்பட்டியல் நிலுவை வருமானம் அவதானிக்கப்பட்டது. இது மீளாய்வாண்டிலே பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 15 சதவீதத்திற்கு மேல் மதிப்பத்தக்கதாக இருந்தது. இந்த நிலுவை தொகையில் ரூபா 903,000 முன்னைய வருடங்களின் நிலுவை வருமானங்களாகும். | நிலுவைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மீளாய்வாண்டிலே நீர் பட்டியல் நிலுவை வருமானம் 2019 ஆம் ஆண்டிலே அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 182,550 வான அனுமதிபத்திர நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 28 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 காரணங்களுக்கு உரிய 2013 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்து உப விதிகளை அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உப விதிகளை அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பிரதான காரணங்கள் 28 க்காக உப விதிகள் அமுல்படுத்தலுக்காக மாகாண சபைகள் உதவி ஆணையாளர் காரியாலயத்திற்கு ஆவணங்கள் அனுப்பப்பட்டிருப்பதுடன் 2019/05/28 ஆந் திகதி நடைபெறுவதற்குள்ள விசேட சபை கூட்டத்தில் அனுமதியை பெற்றுக்கொண்டு மாகாண சபைகள் உதவி ஆணையாளர் காரியாலயத்திற்கு மீண்டும் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு மென்பதுடன் மீதமாக உள்ள காரியாலயங்களுக்காக எதிர்காலத்தில் அவசியமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட வேண்டுமெனினும் சபையினால் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## (இ) பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மக்கள் நலன்கள் மற்றும் சபைக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதில் போதுமான அளவு செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | ஒழுங்காக திட்டமிடப்பட்டு சபையின் நிறைவேற்றும் படியாக வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் சபை ஸ்தாபிக்கப்பட்டு மற்றும் அதில் புதிய உறுப்பினர் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், மக்கள் நலன்கள் மற்றும் சபைக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக போதுமான அளவு செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு தவறியிருந்ததுடன் எதிர்வரும் வருடத்திலே அதற்காக முன்மொழிவுகளை நிறைவேற்றிய பின்னர் மக்கள் நலன்கள் மற்றும் சபைக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக புதிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## (ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவு அகற்றும் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைக்கு அமைவாக கழிவு அகற்றப்பட்டிருக்கவில்லை. கழிவு அகற்றப்படுகின்ற பதவி ஸ்ரீபுர கோடல் வஸ்ண ஒரு புறம் வயல் நிலங்களுக்கும் அடுத்த புறத்தில் இயற்கையான வடிகாலுக்கும் மத்தியில் காணப்படுவதுடன், அதிக மழை காலங்களில் கழிவுகள் வடிகாலுக்கும், வயல் நிலங்களுக்கும் சேர்வதுடன், பௌதீக பரிசீலனை இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பொலித்தீன், பிளாஸ்டிக் உட்பட வேறு கழிவுகள் தீயிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பரிந்துரைக்கு அமைவாக கழிவு அகற்றப்பட வேண்டும். | அடுத்து இடம்பெறுவதற்குள்ள சபைக் கூட்டத்தின் போது முன்மொழிவை நிறைவேற்றிய பின்னர் கழிவு அகற்றும் இடத்தினை மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## (உ) சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கமுடைய அதிகாரச்சட்டங்களின் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கமுடைய தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ''அ'' பிரிவின் முறைமைகளின் பிரகாரம் சுற்றாடலுக்கு குந்தகம் விளைவிக்கும் நெல் ஆலை, பலகைத் தொழில், மற்றும் சீமெந்துடன் தொடர்புடைய உற்பத்திகள் நிறுவனங்கள் ஆகிய வியாபாரங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டுமென்றாலும் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படும் அது போன்ற 21 வியாபார முயற்சிகள் அந்த அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளாமல் தொழிலை மேற்கொண்டிருக்கின்றன. இது சம்பந்தமாக ஏற்படக்கூடிய சுற்றாடல் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு சபையினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய வியாபார தொழில் முயற்சிகளை அடையாளங்கண்டு அனுமதிப் பத்திரத்தை விநியோகித்தல் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளை தீர்த்து வைக்கப்பட வேண்டும். | இது சம்பந்தமாக கடிதம் மூலமாக நினைவு கூறுதலோடு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதுடன் அடுத்து இடம்பெறவுள்ள சபைக் கூட்டத்தின் போது முன்மொழிவை நிறைவேற்றிக் கொண்தன் பின்னர் மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்டையுடன் அறியத்தருகின்றேன். |

## (உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கமுடைய நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தில் | சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தியின் | சுற்றாடலை பாதுகாத்தலின் நோக்கமாக 2019 ஆம் ஆண்டிற்குரிய பாதீட்டு பதிவேட்டிலே ஏற்பாடுகள் |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம், இலக்கு மற்றம் உரிய குறிகாட்டிகள் மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பான போதுமான அறிவை மீளாய்வாண்டிலே பெற்றிருக்காததன் காரணமாக எவ்வித வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | நோக்கம் மற்றும் இலக்கை அண்மிக்கும் வகையில் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். | ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதை நடைமுறைப்படுத்துவதற்காக இப்போதைக்கு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் தற்போது கழிவுகளை அகற்றும் இடத்திற்கு பதிலாக புதிய இடமொன்றும் மற்றும் கழிவுகளை வேறுபடுத்துவதற்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கும் எதிர்பார்த்திருப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆந் திகதி ரூபா 107,010 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொம்போஸ்ட் வாளிகள் 41 மீளாய்வாண்டிலேயும் விநியோகிக்கப்படாமல் சபை வளாகத்தில் குவிக்கப்பட்டிருந்தது. | கொம்போஸ்ட் வாளிகள் திட்டமிட்டிருந்ததன் படி விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த கொம்போஸ்ட வாளிகள் பாடசாலைகளுக்கு பெற்றுப்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அதற்கான தெளிவுபடுத்தும் வேலைத் திட்டத்தின் மூலமாக இந்த வாளிகளை வினியோகிப்பதற்கு எதிர்பார்த்து இருப்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கீழு குறிப்பிடப்பட்ட 13 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிலவிய போதும் அந்த | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட | வெற்றிடங்களை நிரப்புவதற்கான தேவையின் பொருட்டு மதிப்பிற்குரிய ஆளுனருடன் பேச்சுவார்த்தை ஈடுபட்டிருந்ததுடன் |

| | | |
|---|---|---|
| வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீளாய்வாண்டிலே நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | வேண்டும். | ஆவணங்கள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் செலுத்தப்படாததன் காரணமாக முன்னைய வருடத்திலிருந்து தொடர்ந்து காட்டப்படுகின்ற ரூபா 180,654 ஆன முற்பணங்கள் மீதியை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலேயும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | செலுத்தப்படாத மீதிகள் சம்பந்மாக பரிசீலனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு உரிய உத்தியோகத்தரிட மிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த முற்பணத் தொகை 2013 ஆம் வருடத்திலிருந்து காணப்பட்டு வருவதுடன் 2019 ஆம் வருடத்திலே அதை சரி செய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 04 வாகனங்கள் மற்றும் 01 வாகன பகுதி நீண்ட காலத்திலிருந்து பாவனைக்கு உட்படுத்தப்படாமல் குறை பாவனையாக காணப்பட்டது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மஹிந்திரா கெப் வாகனத்தை திருத்த வேலைகளை செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் 02 கை உழவு இயந்திரங்களை பொருள் மெய் ஆய்வின் மூலம் ளுயடந செய்வதற்கு அல்லது வுசயளெகநச செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன், பாாதை அமுக்கு இயந்திரம் மற்றும் இரும்பு பவுசர் ஆகியன செய்து முடிக்கப்பட்டிருப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 3.5 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளாந்த ஓட்டக்குறிப்பு முன்னைய மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய மாதாந்த நாளாந்த ஓட்டக் குறிப்பு கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | நாளாந்த ஓட்டத்தின் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். | மாதாந்த நாளாந்த ஓட்டக்கு குறிப்பு தினத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| 02/2017 இலக்கமுடைய 2012 ஆம் வருட திசெம்பர் 21 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் பிரதேச சபைக்கு உரித்தல்லாத கீழ் குறிப்பிடப்படும் வாகனங்கள் முறையாக பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டிலேயும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இங்கு குறிப்பிடப்பட்ட மற்றும் ஶ்ரீடுகு 7487 ஆகிய இரு வாகனங்களுக்காக நிதி அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டிருப்பதுடன் அந்த வாகனங்களின் புத்தகங்கள் சுஆஏ யில் காணப்படுவதுடன் WPPF-7459 குத்தகைக் காலம் முடிவடைந்த பின்னர் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும், ஏனைய வாகனங்கள் எதிர்காலத்தில் உரித்தாக்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

## 3.6 பெறுகைகள்

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வேலை செயற்திட்டம் மற்றும் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற பொருட்கள் என்பவற்றை உறுதியாக குறிப்பிட்டு வருடாந்த பெறுகைகள் திட்டம் | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பெறுகைகள் திட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுமென்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அப்படி உறுதியான விபரங்கள் மற்றும் பெறுமதிகள் குறிப்பிடப்படாமல் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009/06/09 உடைய DMA/2009(1) இலக்கமுடைய சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை தாபித்து நடாத்திச் செல்லல் வேண்டும். | அனைத்து யோசனைகளையும் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதாகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபித்தல் இடம்பெறவில்லை எனவும், எதிர்காலத்தில் அந்த குழுவை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |